# 3.4 எசாயாவின் தூய்மை



கி. மு எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எசாயா எருசலேமில் வாழ்ந்தார். இறைவனின் அழைப்பைப் பெற்று, தென் அரசிலுள்ள யூதா நாட்டின் மக்களுக்கு, சமூகத்தில் நீதி, நேர்மையைக் கடைப்பிடித்து வாழுமாறு இறைவாக்கு உரைப்பதற்காக அனுப்பப்பட்டார். அசீரியாவின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்த யூதா நாட்டு மக்கள் மிதமிஞ்சிய செல்வச் செழிப்பினால் கடவுளை மறந்து தங்கள் விருப்பப்படி வாழ்ந்து கொண்டிருந்ததை அறிந்தார். அதனால் அவ்வழியிலிருந்து மக்களை மீட்கும் பொருட்டாக எசாயா இறைவாக்கு உரைத்தார்.

## கடந்த காலங்களிலிருந்து சில குறிப்புகள்

சாலமோன் அரசன் திருக்கோவில் அமைப்பதற்காக மக்கள் மீது கடும் சட்டத்தையும் வரிச்சுமையையும் ஏற்படுத்தினார். மக்கள் அவரின் தந்தையாகிய தாவீதின் மீது வைத்திருந்த பற்றினிமித்தம் அவரை எதிர்க்கவில்லை. அவரின் பின் அவரது மகனாகிய ரெகபெயாம் இளைய தலைமுறையினரின் சொற்படி ஆட்சி செய்ய முனைந்தார். அதனால் இஸ்ரயேல் வட அரசு, தென் அரசு என இரண்டாகப் பிரிய நேரிட்டது.

## அரசுகள் பற்றிய சில தகவல்கள்

| அரசுகள் | கோத்திரங்கள் | தலைநகரம் | முதல் அரசர்கள் |
|---|---|---|---|
| வட அரசு | 10 | சமாரியா | எரொபவாம் |
| தென் அரசு | 02 | எருசலேம் | ரெகபெயாம் |



இலவச விநியோகத்திற்காக

## பிளவுபட்ட வட தென் அரசுகள்






இலவச விநியோகத்திற்காக

இவ்வாறு இஸ்ரயேல் இரு அரசுக்காளாகப் பிரிக்கப்பட்டிருந்த காலத்திலேயே இறைவாக்கினர்கள் முக்கியத்துவம் பெறுகிறார்கள்

## இறைவாக்கினர்களின் பணிகள்

- ஓரிறைக் கோட்பாட்டை வலியுறுத்தல்.
- இறைவனின் விருப்பத்தை மக்களுக்கு எடுத்துக் கூறுதல்.
- இறைவனின் வழிகாட்டலை மக்களுக்கு அறிவித்தல்.
- இறைவழிபாடு உயிரோட்டமாக இருக்கும் பொருட்டு வழிநடத்துதல்.
- வறியவர்கள், ஒடுக்கபட்டோர், கைம்பெண்கள் ஆகியோருக்கு நீதி வழங்குதல்.
- அரசர்களுக்கு வழிகாட்டல்
- சமூக ஊழல்களை எடுத்துக் கூறல்
- ஒழுக்க வாழ்வை வலியுறுத்தல்.
- நீதிச் சட்டத்தின் வழி நடக்கத் தூண்டுதல்
- தவறான இறைபுரிதலை மறுத்துரைத்தல்.

**எசாயா என்பதன் பொருள் 'யாவே விடுவிக்கிறவர்' என்பதாகும்.**

எசாயா ஆமோட்சின் மகன். அரசர்களுக்கும் அறிவுரைகள் கொடுக்கக் கூடிய அறிவுக்கூர்மை இவரிடம் காணப்பட்டது.

## எசாயாவின் அழைப்பு



வாசிப்போம்
எசாயா 6:1-8

**கலந்துரையாடல் :**

மாணவர்கள் :- வணக்கம் ஆசிரியரே!

ஆசிரியர் :- வணக்கம் பிள்ளைகளே, இன்று நாம் இறைவாக்கினர் எசாயாவை பற்றிப் படிக்கப் போகிறோம். அவரைப்பற்றி உங்களுக்கு தெரிந்த தகவல்களைக் கூறுங்கள்.

வசந்தி :- ''மிகவும் உயரமானதோர் அரியணையில் ஆண்டவர் அமர்ந்திருப்பதை நான் கண்டேன். அவரது தொங்கலாடை கோவிலை நிரப்பிற்று. சேராபீன்கள் கடவுளின்



இலவச விநியோகத்திற்காக

தூய்மைப்பற்றி, படைகளின் ஆண்டவர் தூயவர், தூயவர், தூயவர்; மண்ணுலகம் முழுவதும் அவரது மாட்சியால் நிறைந்துள்ளது" என்று அவரைத் துதித்துக் கொண்டிருந்தார்கள் என திருவிவிலியத்தில் எழுதப்பட்டுள்ளது, ஆசிரியரே!

ஆசிரியர் :- ஆமாம் பிள்ளைகளே, ஆண்டவர் தூய்மையானவர். நாமும் தூய்மையாக்கப்பட வேண்டும்.

## எசாயாவின் குரல்



தூய்மையற்ற உதடுகளைக் கொண்ட மனிதன் நான்; தூய்மையற்ற உதடுகளைக் கொண்ட மக்கள் நடுவில் வாழ்பவன் நான்; படைகளின் ஆண்டவராகிய அரசரை என் கண்கள் கண்டனவே.

(எசாயா 6:1-5)

எசாயா தான் தூய்மையற்றவர் என்றதும் ஒரு சேராபீன் பலிப்பீடத்திலிருந்து நெருப்பு பொறி ஒன்றைக் குறட்டால் எடுத்து எசாயாவின் உதடுகளைத் தொட்டு, " உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன " என்றது. உடனே தன்னுடைய அசுத்தங்கள் நீக்கப்பட்டு தான் தூய்மையாக்கப்பட்டதை உணர்ந்தார். தீய செயல்களில் ஈடுபட்டிருக்கும் மக்களைத் தூய்மைப்படுத்த இறைவனின் அழைப்பை ஏற்று இறைவாக்குரைப்பதற்கு எசாயா முன் செல்கிறார்.

### நமது சிந்தனைக்கு

நாம் கடவுளின் அடியவராக நமது அன்றாடப் பணிகளை மேற்கொள்ளும் முன் இறைவனால் தூய்மையாக்கபட வேண்டும். நம்முடைய தீமையான செயல்களை நீக்கி நற்செயல்களைச் செய்ய முன்வருவதன் மூலம் இறையாட்சியின் வளர்ச்சிக்கு நம்மை அர்ப்பணித்து வாழ முடியும்.



வாசிப்போம்
எசாயா 1:17-19



இலவச விநியோகத்திற்காக

## எசாயாவின் செய்தி

எசாயா 1-39 அதிகாரங்கள் யூதா மக்கள் கடவுள் வழியில் நடவாததால் சிறைப்பட்டுப் போக நேரிடும் எனும் செய்தியைத் தாங்கி வருகிறது. அதேபோல் அசீரியாவின் அச்சுறுத்தல் யூதாவுக்கு இருந்ததையும் எடுத்துக் காண்பிக்கின்றது. எனவே, இப்பின்னணியில் இருந்தே எசாயாவின் செய்தி வழங்கப்பட்டது. சமூகத்தை புதியதாக மாற்றி அமைப்பதற்கு எசாயா கீழ்வரும் செயல்களை வலியுறுத்தினார்.

- ❖ யூதேயா மக்களின் கடவுள் அச்சமற்ற வாழ்வு சுட்டப்படுவதுடன் தீமை செய்தலை விட்டு விடுதல்.
- ❖ நன்மை செய்யக் கற்றுக் கொள்ளுதல்.
- ❖ நீதியை நாடித் தேடுதல்.
- ❖ ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்தல்.
- ❖ திக்கற்றோருக்கு நீதி வழங்குதல்.
- ❖ கைம்பெண்களுக்காக வழக்காடுதல்.

யூதா மக்கள் தீய வழிகளினால் வீழ்ந்து போவார்கள் என்பது எசாயாவின் செய்தியில் வலியுறுத்தப்படுகின்றது. இருப்பினும் கடவுள் அவர்களின் முதற்பிதாக்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை நினைவு கூர்ந்து அவர்களை முற்றிலும் கைவிடாது அவர்கள் நடுவில் இருந்து ஓர் நீதியான அரசரைத் தோற்றுவிப்பார் எனும் செய்தி எசாயாவால் வழங்கப்படுகின்றது.

**நீதியுள்ள அரசர்**

''இதோ ஓர் அரசர் நேர்மையுடன் அரசாள்வார்.
தலைவர்களும் நீதியோடு ஆட்சி செய்வர்; ஒவ்வொருவரும்
காற்றுக்கு ஒதுங்கிடமாகவும் புயலுக்குப் புகலிடமாகவும்,
வறண்ட நிலத்தில் நீருள்ள கால்வாய் போலவும் காய்ந்த
மண்ணில் பெரும் குன்றின் நிழல் போலவும் இருப்பர்.''

**எசாயா 32:1-2**

இவ்வாறு மக்களுக்கு அறைகூவல் விடுத்து தீய செயல்களில் ஈடுபடாமல் நன்மை செய்யுங்கள் என்று கூறி அழைத்தாலும் மக்கள் கடவுளை மறந்து தீய வழியிலே செயற்படுகிறார்கள்.

**ஏழைகளுக்கு நீதி செய்யாது, அவர்களை ஒடுக்கி அநீதியின் வழியில் சேர்க்கும் செல்வம், தீமையான செயல்கள் போன்றவை தீமையையே பிறப்பிக்கும்.**



இலவச விநியோகத்திற்காக

## எசாயா மக்களை மனந்திரும்ப அழைக்கிறார்



"உங்கள் பாவங்கள் கடுஞ்சிவப்பாய் இருக்கின்றன; எனினும், உறைந்த பனிபோல் அவை வெண்மையாகும். இரத்த நிறமாய் அவை சிவந்திருக்கின்றன; எனினும் பஞ்சைப் போல் அவை வெண்மையாகும்." எசாயா 1:18

இவ்வாறு எசாயா புதிய சமுதாயத்தில் நீதி, நேர்மையுடன் வாழுங்கள் என்கிறார். தீய செயல்களை விட்டு மனந்திரும்புங்கள் எனக் கூவி அழைத்தார்.

### நமது பாவங்களை மன்னித்து வாழ்வளிப்பவர் ஒருவரே

சமுதாயம் தீமையான செயல்களில் ஈடுபடும் எனினும் காலம் நிறைவேறும் போது உலக மீட்பர் தோன்றி அனைவரையும் வாழ வைப்பார். அவர் தாவீதின் வழியில் தோன்றி நீதி, நேர்மையோடு கடவுளின் ஆட்சியை நிறுவுவார். இவ்விதம் இறைவாக்கினர் எசாயா எதிர்வு கூறினார்.

### இறையாட்சியின் பணியில் நாம் புதிய சமுதாயத்தை நோக்கி.......

*சிறுவர் பாதுகாப்புச் சட்டத்தின் படி, வேலைக்கமர்த்தப்பட்டு துன்புறுத்தப்படும் சிறுவர்களை மீட்போம்.*

*முதிர்ந்தோரை உறவினர்களின் இல்லங்களில் தங்க வைப்போம்.*

*மக்கள் எங்கும் வாழ உரிமையுண்டு, அவர்களுக்கான வசதிகளைச் செய்வோம்.*

இவ்வாறு தூய்மையான நல்ல சமுதாயத்தை உருவாக்க நாம் முயன்று செயல்படுவோம். அநீதிக்கு எதிராகக் குரல் கொடுப்போம்.



இலவச விநியோகத்திற்காக

**குழு 1**

அநீதிகளை இனம் காணுங்கள்

**குழு 2**

அநீதிகளை ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வுகளை முன் வையுங்கள்

ஒரே கடவுளை வழிபட்டு நல்குடிமக்களை உருவாக்குவோம். நாம் முன்னுதாரணமாக வாழ்ந்து, சமுதாயத்தை இறையாட்சியின் வளர்ச்சிக்கு உதவுவதற்குத் தூண்டுவோம்.

**செயல்பாடு**

*1* *எசாயா, இறைவனின் அழைப்பைப் பெற்றுக்கொண்ட காட்சியை படமாக வரைக.*

*2* *எசாயா யூதா நாட்டு மக்களுக்கு கூறிய அறிவுரைகள் இரண்டைஎழுதி அவற்றை விளக்குக.*

*3* *அவ் அறிவுரை ஒன்றை தலைப்பாகக் கொண்டு இன்றைய சமுதாயத்திற்கு ஏற்றதாக சுவரொட்டி ஒன்று தயார் செய்க.*



இலவச விநியோகத்திற்காக